**கட்டுவன பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்டுவன பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்வரும் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 நவம்பர் 17 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 6,313,558 தொகையான தகன அறை அமைந்துள்ள கட்டிடத்தில் பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,250,100 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கைத்சாத்திடப்பட்டிருந்த ரூபா 432,336 தொகையான பணியொன்றுக்காக கடன்பட்டோர் ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு பரிந்துரைக்கமைய மீளாய்வாண்டினுள் அகற்றப்பட்டிருந்த ரூபா 208,308 தொகையான சொத்துக்களின் கிரயம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வெகுமதியாக கிடைத்திருந்த ரூபா 107,000 தொகையான 06 சொத்துக்களின் பெறுமதிகள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் பிடிகாசமான ரூபா 90,497 தொகை கணக்கு வைக்கப்பட்டிராததுடன், காகிதாதிகள் மற்றும் எரிபொருள் இருப்பின் பெறுமதி ரூபா 53,570 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) பொது இருப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 61,882 தொகையான இருப்பின் பெறுமதி இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 46,367,385 கூட்டுத்தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) பல வருடங்களாக அறவிடப்பட வேண்டியதாக காணப்படும் ரூபா 76,717 தொகையான ஆதனக் கடன் வட்டி மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்படும் மற்றும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 521,529 வரை அதிகரித்திருந்த பெற வேண்டிய விதிவிளக்கு பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் 20 கைத்தொழில்களுக்காக ரூபா 16,407,810 தொகையான பணம் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் நிறைவேற்றப்பட்ட 20 பணிகளுக்காக ரூபா 16,457,810 தொகையான பணம் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது.

(ii) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையினால் தீர்க்கப்படாத பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 22,271,895 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 11,593,846 தொகையான பொறுப்புக்கள் முன்னைய ஆண்டிற்கு உரித்தானவையாகும்.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 152,702 கூட்டுத்தொகையான 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை முத்திரைக் கட்டணங்களுக்குரிய பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளும், ரூபா 5,118,836 கூட்டுத்தொகையான நிலுவை நீர்க்கட்டண வருமானத்திற்குரிய பட்டோலைகளும், முறையே ரூபா 110,150 தொகை மற்றும் ரூபா ரூபா 1,421,468 தொகையான நிலுவை வியாபார அனுமதிப்பத்திர கட்டணங்கள் மற்றும் நிலுவை கடை வாடகை வருமானங்களுக்குரிய நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடுகளும் முன்வைக்கப்பட்டமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் பிரதேச சபை | |
| i. 152(2) ஆம் பிரிவு | சபையின் பிரதேசத்தில் பயிற்சியில் ஈடுபடும் தொழில் வல்லுநர்களிடமிருந்து வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| ii. 154 ஆம் பிரிவு | சபையின் எல்லையில் காணிகளை விற்பனை செய்தமையின் அடிப்படையில் பெறப்பட்ட பணத்தில் ஒரு சதவீதமான வரியினை அறவிடுவதற்குப் பதிலாக அந்த காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் வரி அகற்றப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிக்கோவை | |
| i. விதி 177 | சபைக்குச் சொந்தமான 8 வாரச் சந்தைகள் விலைமனுக் கோரப்பட்டு குத்தகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. விதி 218 | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான வருடாந்த மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| i. நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருட காலத்தினை விஞ்சிய ரூபா 874,285 கூட்டுத்தொகையான 41 கைத்தொழில் பிடி காசு மீதிகளை ஒழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 1645(அ) | வாகனங்களின் சம்பவக்குறிப்பு புத்தகங்களை நாளதுவரையாக பேணியிருக்கவில்லை. |
| (ஈ) 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க பொது நிதிச் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 4.3 (அ), (ஆ) மற்றும் (உ) பிரிவுகள் | இடமாற்றம் பெற்றுச்சென்ற, மரணமடைந்த, ஓய்வு பெற்றுச்சென்ற, சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து விலக்கப்பட்ட 09 உத்தியோகதர்களின் ரூபா 26,525 தொகையான கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் குழுவினது தீர்மானமின்றி மித்தெனிய சந்தையின் நுழைவாயிலினை தயாரிக்கும் பணிக்காக ரூபா 50,989 தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இரு சந்தர்ப்பங்களில் ரூபா 198,710 கூட்டுத்தொகையான மின்சார உபகரணங்களின் இருப்பு களஞ்சியத்திற்குக விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பொருட்களை விநியோகித்தல் தொடர்பில் கூறுவிலைகளை கோருதல், கட்டளையிடல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், இந்த விநியோகம் தொடர்பில் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,702,240 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய

வருமானம் ரூபா 4,556,232 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 7,146,008 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 86 சதவீதமான உயர்வான பெறுமானத்துடனான செலவினங்கள் காணப்பட்டதுடன், அது நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலையொன்றல்ல என்பதை பிரதிபலித்தது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் சபையின் சுயமாக ஈட்டப்பட்ட வருமானத்தின் அளவினை மிகைத்து கவனத்திற் கொள்ளக்கூடிய அளவில் மீண்டெழும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும், வருமானத்தின் உதவி கிடைத்திருக்காவிடின் சபையின் வருமானத்தில் எந்த விதத்திலும் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்ய முடியாது என்பதை காட்டியது. செலவினத்தை கட்டுப்படுத்தி குறைந்த மட்டத்தில் பேணுவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை காட்டியது.

**2.3 செயற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோர் மீதியினுள் 3 வருடங்களை விஞ்சிய காலமாக அறவிடப்படாது காணப்படும் ரூபா 16,407,810 தொகையான கடன்பட்டோர் மீதிகள் காண்ப்படுகின்றமையால் நடைமுறை மற்றும் விரைவு விகிதங்களுக்கமைய திரவத்தன்மை இல்லாதிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

**2.4 வருமான நிர்வாகம்**

**2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வண்டினுள் வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 40,407,161 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 29,535,393 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 73 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,668,669 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 8,745,995 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 69 சதவீதமாக இருந்தது.

**2.4.2 வீதவரியும் வரியும்**

2004 யூன் 23 ஆந் திகதிய 1346/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அபிவிருத்தியடைந்த கிராமங்கள் வெளியிடப்பட்டிருந்த போதிலுமட, 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கமைய வீதிவரி பிரதேசங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வீதிவரியினை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 ஏக்கர் வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 (1) (அ) பிரிவிற்கமைய நிலுவை ஏக்கர் வரியினை அறவிடல் போதியளவான நிலையில் காணப்படவில்லை. ஆரம்ப நிலுவையில் மீளாண்வாண்டினுள் 7 சசதவீதமான பெறுமதி அறவிடப்பட்டிருந்தது.

**2.4.4 குத்தகை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக 21 கடை அறைகளிலிருந்து ரூபா 394,347 தொகையான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்திக்கமைய 2015 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்ட இரண்டு கடைகளிலிருந்து சேகரிக்கப்படும் ரூபா 425,000 தொகையான பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.5 கைத்தொழில் வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்**

மீளாய்வாண்டிற்கான 25 கைத்தொழில் மற்றும் வியாபார அலகுகளிலிருந்து ரூபா 25,850 தொகையான கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.6 ஏனைய வருமானம்**

**(அ) இயந்திர உபகரண வருமானம்**

2013, 2014, 2015 மற்றும் மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய இயந்திர உபகரண வருமானம் ரூபா 923,557 ஆகும்.

**(ஆ) நீர்க் கட்டண வருமானம்**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 5,118,836 ஆகும்.

**2.4.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நீதிமன்ற தண்டப்பணத்திற்காக ரூபா 800,372 தொகையும், முத்திரைக் கட்டணங்களுக்காக ரூபா 6,213,800 தொகையும் பெற வேண்டியதாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செய்றதிறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பல்வேறு அரச நிறுவனங்களிடமிருந்து சபைக்கு கிடைத்திருந்த 05 வாகனங்களுக்குரிய மற்றும் ரூபா 860,750 தொகையான 12 காணிகளின் உரித்து சபையினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மித்தெனிய சிறப்பு அங்காடித் தொகுதியின் 06 கடைகள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்காக 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி விலைக்கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், அதன் போது தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரருடன் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மித்தெனிய புதிய சந்தைத் தொகுதியில் 10 கடைத்தொகுதிகள் 09 கடைகள் விலைக்கேள்வி நடைமுறையை பின்பற்றாமல் ஒரு கடைத்தொகுதிக்கு ரூபா 50,000 படி

ரூபா 450,000 கூட்டுத்தொகையான பணம் ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளப்பட்டு 09 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அந்த கடைத்தொகுதிகளிலிருந்து வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் கழிவகற்றப்படும் நிலப்பிரதேசம் மற்றும் கூட்டெரு உற்பத்தி செயற்திட்டம் என்பவற்றிற்காக தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 2000 இன் 53 ஆம் இலக்க புதிய வர்த்தமானி திருத்தத்திற்கமைய வெளியிடப்பட்ட 2008 சனவரி 25 ஆந் திகதிய மற்றும் 1553/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்றினை பெற்றுக் கொள்வதற்கு 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டெரு நிலையத்திற்காக நிரந்தரமாக ஊழியர்கள் இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், பதிலீட்டு உத்தியோகத்தர்கள் இருவர் அவ்வப்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 மே 07 ஆந் திகதி கூட்டெரு நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஹலர் இயந்திரமொன்று சபையிடம் காணப்படாமையால் அத்திகதி முதல் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் உற்பத்தி செய்யப்பட்ட கூட்டெரு நிலையத்தின் ஒரு பகுதியில் குவிக்கப்பட்டிருந்தது.

**3.3 விளைவற்ற சொத்துக்கள்**

---

கொன்கிறீட் கலவை இயந்திரம் வருடம் முழுவதும், சபையின் 06 வாகனங்கள் பல வருடங்களாகவும் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.4 பதவியணியினர் நிர்வாகம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மிகைப் பதவியணி 09 ஆக இருந்ததுடன், பற்றாக்குறைகளின் எண்ணிக்கை 09 ஆகும். வெற்றிடங்களை நிரப்பிக்கொள்வதற்கோ அல்லது மிகை எண்ணிக்கையை முறைமைப்படுத்துவதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 16 ஊழியர்களுக்கு அவர்களுக்குரிய பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தாது ஏனைய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

---

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

28 செலவின விடயங்களுக்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,192,000 கூட்டுத்தொகையான மொத்த பணமும், 72 செலவின விடயங்களுக்குரிய ரூபா 11,733,194 தொகையான சேமிப்புக்களும் அவதானிக்கப்பட்டது. அத்துடன், அந்த பெறுமதிகளில் 10 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதனால் மீளாய்வாண்டிற்கான பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**4.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

சபைக்கு சொந்தமான 04 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு